செ.வெ.எண்.344/2009/செமதொஅ நாள்:10.10.2009

**திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், மேவளூர் குப்பம் ஊராட்சியில் ரூ.28.80 இலட்சம் மதிப்பிலான பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்து இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், மேவளூர் குப்பம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற கூடுதல் கட்டடம், கணினி கட்டடம், நூலக கட்டடம், அங்கன்வாடி கட்டடம், பள்ளி கட்டிட சுற்றுச்சுவர், அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம், கலையரங்கம் ஆகியவை திறப்பு விழா மற்றும் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு ரூ.5.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற கூடுதல் கட்டடம், ரூ.1.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கணினி கட்டடம், ரூ.3.14 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நூலக கட்டடம், ரூ.2.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டடம், ரூ.6.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டிட சுற்றுச்சுவர், அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் ரூ.9.75 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம், ரூ.1.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கலையரங்கம் ஆக மொத்தம் ரூ.28.89 இலட்சம் மதிப்பிலான கட்டடங்களை திறந்து வைத்து, 646 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்கி பேசியதாவது,

மேவளூர் குப்பம் ஊராட்சியில் புதிய கட்டடங்களை திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நயப்பாக்கம், மேவளூர் குப்பம் சாலை அமைக்க 5½ கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் 100 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏழை-எளிய மக்களின் உயர் காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் மருத்துவக் காப்பீட்டு திட்டம் என்னும் புதிய திட்டத்தை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். இதன் மூலம் 1 கோடி ஏழை-எளிய குடும்பங்கள் தனியார் மருத்துவமனைகளிலும் ரூ.1 லட்சம் வர மருத்துவ வசதியினை இலவசமாக பெறலாம். இத்திட்டத்தில் அமைப்புச்சாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களும், ஆண்டு வருமானம் ரூ.72,000க்கும் குறைவாக உள்ளவர்களும் சேர்ந்து பயன்பெறலாம் என கூறினார்.

விழாவில் காஞ்சிபுரம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.எஸ்.பன்னீர்செல்வம் தலைமையுரையாற்றினார். திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.வனமயில் மாணிக்கம் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். முன்னதாக மேவளூர் குப்பம் ஊராட்சி தலைவர் திரு.ந.கோபால் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். முடிவில் ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் திரு.கி.ராமதாஸ் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் தனித்துணை ஆட்சியர் திரு.சி.முனுசாமி, வட்டாட்சியர் திரு.இரா.கந்தசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நா.சுரேஷ்குமார், திரு.பிரான்சிஸ் மைக்கேல், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.நிக்கோலஸ், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி மன்ற உறப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.